‘அ’ பிரிவு

## A1 <u>பிழை திருத்தம்</u> ( 10 மதிப்பெண்கள் )

*பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.*

“சுற்றுப்பயணிகள் நம் நாட்டுக்கு வருவதால் என்ன பயன்?” என்று தேவி தன் தந்தையிடம் கேட்டாள். **( Q1 )** “<u>சுற்றுப்பயணி</u> இங்கு செலவு செய்யத் தம் நாட்டுப் பணத்தை மிகுதியாகக் கொண்டு வருகிறார்கள். பயணிகள் அப்பணத்தை நம் நாட்டுப் பணமாக மாற்றி இங்கு பொருட்கள் **( Q2 )** <u>வாங்கினார்கள்.</u> அவர்கள் நாணயத்தை நாம் அவர்கள் **( Q3 )** <u>நாட்டை</u> அனுப்பி அதற்கு ஈடாகத் தங்கத்தைப் பெறுகிறோம். இச்சுற்றுப்பயணிகள் மூலம் நமக்கு பலகோடி வெள்ளி வெளிநாட்டு **( Q4 )** <u>நானயம்</u> கிடைக்கிறது. இப்பணத்தைக் கொண்டு நம் நாட்டுக்குத் தேவையான இயந்திரங்கள், துணிகள், உணவுப் பொருட்கள் முதலியவற்றை இறக்குமதி **( Q5 )** <u>செய்த</u> கொள்கிறோம். வெளி நாடுகளில் நம் பணத்தின் மதிப்பும் உயர்கிறது,” என்று தேவிக்கு அவள் தந்தை விளக்கினார்.

| | |
|---|---|
| **Q1** | |
| **Q2** | |
| **Q3** | |
| **Q4** | |
| **Q5** | |

MORE TESTPAPERS AVAILABLE AT TESTPAPERSFREE.COM

## A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

*பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.*

Q6. ஏழை மாணவர்கள் கல்வி பயில அரசாங்கம் உதவி செய்கிறது.

ஏழை மாணவர்கள் அரசாங்கத்தின் உதவியால் கல்வி

_______________________________________ .

Q7. இசை நிகழ்ச்சி காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை நடைபெறுகிறது.

இசை நிகழ்ச்சி காலை பத்து மணிக்குத் தொடங்கி மாலை ஐந்து மணிக்கு

_______________________________________ .

Q8. நான் வெற்றி பெற்றதைக் கேட்ட என் பெற்றோரும் உறவினர்களும் மகிழ்ந்தனர்.

நான் பெற்ற வெற்றி என் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும்

_______________________________________ .

Q9. நாம் ஆரோக்கியமாக வாழ சத்துள்ள உணவும் உடற்பயிற்சியும் மிகவும் அவசியம்.

சத்துள்ள உணவும் உடற்பயிற்சியும் நமக்கு ஆரோக்கியமான

_______________________________________ .

## *A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)*

*பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.*

சிறுமி ஒருத்தி தனியாக அழுதுகொண்டு வருவதைக் கண்ட சில பெண்கள் அவளை நிறுத்தி "உன் பெயர் என்ன?" என்று விசாரித்தனர். அச்சிறுமி, "கண்மணி," என்றாள். "உன் அம்மா பெயர் என்ன?" என்று கேட்டனர். (Q10)_______________ (கண்மணி) அம்மா பெயர் தெரியவில்லை. வீடு எங்கிருக்கிறது என்றும் தெரியவில்லை. (Q11)_______________ (சிறுமி) தாயைக் கண்டுபிடிப்பது எப்படி என பெண்கள் யோசித்தனர். "உன் அம்மா எப்படியிருப்பாள்?" என்று சிறுமியிடம் கேட்டனர். "என் அம்மா (Q12)_______________ (அழகு) சிறந்தவர். இந்த ஊரிலேயே என் (Q13)_______________ (அம்மா) மாதிரி அழகான பெண் கிடையாது," என்று பதிலளித்தாள். அவர்கள் ஊரில் உள்ள அனைத்துப் பெண்களையும் வரவழைத்தனர். அப்பெண்களைப் பார்த்த சிறுமி, "இவர்களில் என் அம்மா இல்லை," என்று கூறினாள்.

## 'ஆ' பிரிவு

### B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

ஒரு நாள் அக்பருக்கும் அவர் மனைவிக்கும் தகராறு ஏற்பட்டது. அக்பர் தன் மனைவியிடம் "இங்கிருந்து போகும் போது உனக்குப் பிடித்தப் பொருளை எடுத்துக்கொண்டு போ," என்று கூறினார். அக்பரின் மனைவி "உங்களை விட்டு பிரிந்து போவதற்கு முன் நான் உங்களுக்கு என் கையால் ஒரு கோப்பை பானம் கொடுக்க அனுமதி வேண்டுகிறேன்," என்றாள். Q14_______________________. ஒரு சில நிமிடங்களிலேயே அக்பர் கொட்டாவி விட்டுக் கொண்டு மயக்க நிலையில் தூங்கிப் போனார். Q15_______________________. பின்னர் அவள் தனக்குப் பிடித்தப் பொருள்களுடன் தன் தாய் வீட்டிற்குச் சென்றாள்.

சில மணி நேரத்திற்குப் பிறகு மயக்கம் தெளிந்து கண் விழித்தார் அக்பர். Q16_______________________. ஆத்திரமடைந்த அக்பர் தன் மனைவியை அழைத்து "நான் எப்படி இங்கு வந்தேன்?" என்றார். "என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?" Q17_______________________. உங்களைவிட அந்த அரண்மனையில் எனக்குப் பிடித்தது வேறு எதுவும் இல்லை. அதனால்தான் நான் உங்களை இங்கு அழைத்து வந்தேன் என்றார் அக்பரின் மனைவி. அதைக் கேட்ட அக்பர் தன் கோபத்தை மறந்து மனைவியின் சாமர்த்தியத்தைப் பாராட்டினார்.

1. உடனே அவள் மயக்க நிலையிலிருந்த அக்பரை ஒரு பல்லக்கில் கிடத்தினாள்.
2. ஒரு சில காவலாளிகள் உங்களை பலவந்தமாக இங்கு அழைத்து வந்தனர்.
3. அக்பர் தன் அரண்மனையில் இருப்பதை உணர்ந்து கொண்டார்.
4. எனக்குப் பிடித்தமானதை எடுத்து வரலாம் என அனுமதித்தீர்கள்.
5. ராணி கொடுத்த பானத்தை அக்பர் பருகினார்.
6. அக்பரை அவரது படுக்கையில் படுக்க வைத்தனர்.
7. அப்போதுதான் அக்பர் அவரது மாமனார் இல்லத்தில் இருப்பதை உணர்ந்தார்.
8. சக்கரவர்த்தி அக்பர் விஷம் கலந்த பானத்தைப் பருகினார்.

| விடை எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

‘இ’ பிரிவு

## C5 சுயவிடைக் கருத்தறிதல் (22 மதிப்பெண்கள்)

*பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது:*

இரவீந்திரநாத் தாகூர் ஓர் உலகக்கவிஞர். அவர் உலக மக்களால் போற்றப்படும் பல அரிய இலக்கியங்களைப் படைத்திருக்கிறார். அவர் இயற்றிய ‘கீதாஞ்சலியை’ அறியாதவர் யாரும் இருக்கமாட்டார்.

தாகூர் ஆயிரக்கணக்கான கவிதைகளையும் இசைப்பாடல்களையும் இயற்றியுள்ளார். எண்ணற்ற சிறுகதைகளும் *ஏராளமான* நாடகங்களும் நாவல்களும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். நூற்றுமூன்று பாடல்கள் உடைய ‘கீதாஞ்சலி’ தொகுதிதான் உலகக் கலைஞர்களின் உள்ளத்தையெல்லாம் கொள்ளைக்கொண்டது. அது கவிஞர் தாகூரை உலக மகாகவியாகக் காட்டியது.

இலக்கியத்தில் கவிதை, இசைப்பாடல், சிறுகதை, நாவல், நாடகம், கடிதம், கட்டுரை என தாகூர் ஈடுபடாத துறை எதுவுமில்லை. அவர் ஒவ்வொரு இலக்கியத் துறையிலும் உயர்ந்தே நிற்கிறார். இலக்கியத்தில் மட்டுமின்றி இசை, நாடகம், ஓவியம் என்று பிற கலைகளிலும் வல்லவராக விளங்கிய அவர் “பல்கலைச் செல்வர்” என அழைக்கப்பட்டார்.

இவர் உலக மக்களின் நல்வாழ்வு ஒன்றையே *குறிக்கோளாகக்* கொண்டிருந்தார். உலக மக்கள் எல்லாரும் ஒரே குலம் என்ற உணர்வு இவர் உள்ளத்தில் மேலோங்கியிருந்தது. அக்குறிக்கோளுடன் இலக்கியங்களைப் படைத்தார். அக்குறிக்கோளுக்காகவே உழைத்தார்.

புராதன மரபுகளைப் போற்றும் குடும்பத்திலே தோன்றியவர் தாகூர். வேதங்களும் இதிகாசங்களும் உணர்த்தும் நன்னெறிகளை மதித்து வாழ்ந்த பரம்பரையைச் சார்ந்தவர். எனினும், அவர் எதனையும் ஆராய்ந்து நன்மை தீமை நாடிச் செயல்படும் சிந்தனையாளர். ஆகவேதான், அறிவியலையோ, இயந்திரப் பயன்பாட்டையோ அவர் வெறுக்கவில்லை. அவற்றை வரவேற்றார். ஆனால், அவற்றுக்கு மனிதன்

அடிமையாகி விடக்கூடாது என்று எச்சரித்தார். அவை உலகின் அழிவுக்கு வழிவகுத்து விடலாம். இத்தகைய சூழ்நிலை ஒன்று உருவாகாமல் உலக நாடுகள் ஒன்றுக்கொன்று அன்பு செலுத்த வேண்டும். நல்லுறவுடன் பிற நாடுகளுடன் ஆதரவாக வாழ்ந்து வர வேண்டும் என்று கவிஞர் அறிவுறுத்தி வந்தார். அவரும் அதன்படி வாழ்ந்து காட்டினார்.

எல்லா நாட்டினரும் ஒரே குடும்பமாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தின் அடையாளமாகவே, "விசுவ பாரதியை" உருவாக்கினார். விசுவபாரதி இந்தியாவில் அமைந்த ஓர் உலகப் பல்கலைக்கழகம். உலக மக்கள் அனைவரும் ஒரே குலம் என்பதை எடுத்துக்காட்டும் கவிஞரின் இலட்சியப் பல்கலைகழகம் அதுவே ஆகும்.

வினாக்கள்

Q18. தாகூர் ஏன் உலக மகா கவி என்று அழைக்கப்படுகிறார்? (3)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q19. தாகூர் ஏன் "பல்கலைச் செல்வராகப்" போற்றப்பட்டார்? (4)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q20. தாகூர் எவற்றை அடிப்படையாகக் கொண்டு தன் இலக்கியங்களைப் படைத்தார்? (3)

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q21. தாகூரை நாம் ஏன் சிந்தனையாளர் என்று கூறுகிறோம்? (5)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q22. அறிவியலுக்கும் இயந்திரப் பயன்பாட்டுக்கும் ஏன் மனிதன் அடிமை ஆகக்கூடாது? (4)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q23. "விசுவ பாரதி" என்னும் உலகப் பல்கலைக் கழகம் எத்தகைய நோக்கத்தோடு அமைக்கப்பட்டது? (3)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருலை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. ஏராளமான - ____________________ (2)

ஆ. குறிக்கோளாக - ____________________ (2)

P6 HMT
TESTPAPER 8

"சுற்றுப்பயணிகள் நம் நாட்டுக்கு..........

1. சுறுப்பயணிகள் 2. வாங்குகிறார்கள் 3. நாட்டுக்கு 4. நாணயம்
5. செய்து

6. பயில்கிறார்கள்.

7. முடிவுறும்.

8. மகிழ்ச்சியை அளித்தது.

9. வாழ்வைத் தரும்.

10. கண்மணிக்கு 11. சிறுமியின் 12. அழகில் 13. அம்மாவை

14. 5 15. 1 16. 7 17. 4

18. தாகூர் எழுதிய கீதாஞ்சலி தொகுதி உலகக் கலைஞர்களின் உள்ளத்தை எல்லாம் கொள்ளைகொண்டதாலும், பல அரிய இலக்கியங்களைப் படைத்திருப்பதாலும் அவர் உலக மகா கவி என்று அழைக்கப்படுகிறார்.

19. இலக்கியம், இசை, நாடகம், ஓவியம் என்று பிற கலைகளிலும் வல்லவராக விளங்கியதால் தாகூர் பலகலச் செல்வர் என்று போற்றப்படுகிறார்.

20. உலக மக்களின் நல்வாழ்வை முக்கியமாகக் கொண்டு அவர்கள் அனைவரும் ஒரே குலம் என்ற உணர்வை அடிப்படையாகக் கொண்டு தாகூர் தம் இலக்கியங்களைப் படைத்தார்.

21. தாகூர் புராதன மரபுகளைப் போற்றும் குடும்பத்தில் பிறந்து வேதங்களும் இதிகாசங்களும் உணர்த்திடும் நன்நெறிகளை மதித்து வாழ்ந்த பரம்பரையைச் சார்ந்தவர். அவர் எதனையும் ஆராய்ந்து பார்த்து நன்மை தீமை நாடிச் செயல்படுவதால் தாகூரை நாம் சிந்தனையாளர் என்று கூறுகிறோம்.

22. அறிவியலும் இயந்திரப் பயன்பாடும் மேலோங்குமானால் அன்புக்கு இடமில்லாமல் உலகின் அழிவுக்கு வழிவகுத்துவிடக்கூடும் என்பதால் மனிதன் அறிவியலுக்கும் இயந்திரப் பயன்பாட்டுக்கும் அடிமை ஆகக்கூடாது.

23. எல்லா நாட்டினரும் ஒரே குடும்பமாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் விசுவ பாரதி என்ற பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. அதிகமான

ஆ. இலட்சியமாக